பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 09 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ப்ரூனே, சிங்கப்பூர் நாடுகளுக்க மூன்று நாள் அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி, முதல்கட்டமாக ப்ரூனே சென்றடைந்தார்.
2. தில்லி பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கான துறையை அமைத்துத் தருமாறு குடியரசு துணைத்தலைவரை மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. தமிழகத்தில் கூடுதலாக நியாயவிலைக் கடைகளை திறக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில அமைச்சர் திரு எஸ் ரகுபதி தெரிவித்துள்ளார்.
4. வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை மறுநாள் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்று ஆடவர் உயரம் தாண்டுதல் இறுதிச் சுற்றில் இந்தியாவின் மாரியப்பன் தங்கவேலு, சைலேஷ் குமார், ஷரத்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ப்ரூனே, சிங்கப்பூர் நாடுகளுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி, முதலில் ப்ரூனேயின் **Bandar seri begawan** இன்று சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் பிரதமரை, அந்நாட்டு பட்டத்து இளவரசர் **Haji Al-Muhtadee Billah** பாரம்பரிய முறைப்படி வரவேற்றார்.

அங்குள்ள இந்திய தூதரக அலுவலகத்தின் புதிய பிரிவை பிரதமர் திறந்து வைத்தார்.

பின்னர் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் அங்குள்ள இந்திய மக்களும் கலந்து கொண்டனர்.

புதுதில்லியிலிருந்து புறப்படும் முன் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ப்ரூனே, சிங்கப்பூர் நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள நட்புறவை வலுப்படுத்தும் வகையில் தமது பயணம் அமையும் என்று கூறியுள்ளார்.

ஆசியான் மண்டல நாடுகளுடன் தொடர்பை விரிவுபடுத்துவதற்கும் தமது பயணம் உதவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் கிழக்கத்திய வெளியுறவுக் கொள்கையில் இவ்விரு நாடுகளும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன என்றும், இந்தோ –

பசிபிக் மண்டலத்தில் இரு நாடுகளும் பொருளாதார ரீதியாக சிறப்பு பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவும், ப்ரூனேயும் 40 ஆண்டுகால நல்லுறவை கொண்டாடும் வேளையில், அந்நாட்டு மன்னர் **Sultan Haji Hasanal Bolkiah** -வையும், அரசு குடும்பத்தினரையும் சந்திப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ப்ரூனே பயணத்தை முடித்துக் கொண்டு நாளை சிங்கப்பூர் செல்வதை குறிப்பிட்டுள்ள பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு Tharman Shanmugaratnam, பிரதமர் திரு லாரன்ஸ் வாங், மூத்த அமைச்சர் திரு Lee Hsien Loong உள்ளிட்டோரை சந்தித்து பேசும் நிகழ்வை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

சிங்கப்பூர் தலைவர்களுடன் தாம் நடத்தும் பேச்சுக்கள் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

புதிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் குறிப்பாக உற்பத்தி, கணினிமயமாக்கல், நீடித்த வளர்ச்சி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு வலுப்பெறும் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தில்லி பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கான துறையை அமைத்துத் தருமாறு குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கரிடம், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுதில்லியில் இன்று குடியரசு துணைத்தலைவரை சந்தித்து பேசிய திரு எல் முருகன், தொன்மை சிறப்புமிக்க தமிழ் மொழியை நாடு முழுவதிலும் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் கற்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள தொழிலாளர்களுக்கு பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் பயன்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

அந்த அமைச்சகம் அனைத்து மாநிலங்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள், கட்டுமானம், பீடித் தொழில், திரைப்படத்துறை, நிலக்கரி அல்லாத சுரங்கத்தொழில், ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பிரதமரின்

வீட்டுவசதி திட்டத்தில் வீடு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தை 2029-ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில் தொழிலாளர் நலத்துறை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் மேலும் இரண்டு கோடி மக்களுக்கு வீடு கட்டித்தரும் இலக்குடன் ஐந்து ஆண்டுகாலம் இத்திட்டத்தை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மக்கள் தங்கள் வீடுகளுக்கு அருகிலேயே பொது விநியோக திட்டப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கூடுதலாக நியாயவிலைக் கடைகளை திறக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு எஸ் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வட்டம் காரையூரில் புதிய நியாயவிலைக் கடையை திறந்து வைத்து அமைச்சர் பேசினார்.

இதன்மூலம் காரையூர், சங்கரன்பட்டி, மாங்காடிபட்டி, மறவர் குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர் என்று கூறினார்.

மக்களுக்கான நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் 32 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் திரு ரகுபதி வழங்கினார்.

**[]<<<>>>[]**

வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை மறுநாள் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ---50 செகண்ட்*

**[]<<<>>>[]**

விநாயகர் சதுர்த்தி நெருங்கி வருவதையடுத்து மண்பாண்ட தொழிலாளர்கள் விநாயகர் சிலைகளை தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டத்தின்கீழ், இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தங்களது தொழிலை விரைவாக முடிப்பதற்கு இந்த எந்திரங்கள் பேறுதவியாக உள்ளன என்று பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) -33--- செகண்ட்*

**[]<<<>>>[]**

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியத்தில் உள்ள இருங்குழா குறிச்சி, ஆதானக்குறிச்சி, கோட்டைக்காடு கிராமங்களில் உள்ள மக்களுக்கு சுத்தமான மற்றும் சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணியை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

தூத்துக்கடி வ உ சிதம்பரனார் துறைமுகத்தில் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட ஏழாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வெளி துறைமுக வளர்ச்சித் திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை அத்துறைக்கான கூடுதல் தலைமைச் செயலர் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தை சாலை விபத்து இல்லாத மாவட்டமாக உருவாக்கிட அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி உமா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

**[]<<>>>[]**

திருவண்ணாமலை முதல் கள்ளக்குறிச்சி வரை விரிவுபடுத்தப்படும் நான்கு வழிச்சாலை பணிகளை ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

**[]<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டத்தில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**[]<<>>>[]**

நெல்லை தாமிரபரணி ஆற்றில் பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பாக பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வெள்ளத்தடுப்பு தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சியல் அதிநவீன உபகரணங்களைக் கொண்டு தீயணைப்புத்துறையினர் செய்து காண்பித்தனர்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டத்தில் விளையும் கேரட், உருளைக்கிழங்கு, பூண்டு ஆகிய மலை காய்கறிகளுக்கு புவிசார் குறியீடு வழங்க வேண்டும் என அம்மாவட்ட காய்கறி உற்பத்தியாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்று ஆடவர் உயரம் தாண்டுதல் இறுதிச் சுற்றில் இந்தியாவின் மாரியப்பன் தங்கவேலு, சைலேஷ் குமார், ஷரத்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் துப்பாக்கி சுடுதல் பிரிவு இறுதிச் சுற்றில் **Avani Lekara,** இன்று பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 4-6, 6-2 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **watsachol** - யை வென்றார்.

**[]<<<>>>[]**

18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஈரானை எதிர்கொள்கிறது.

ஜோர்டானில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

தென்கொரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரார்த்தனா **thombare** – நெதர்லாந்தின் **Arianne Hartono** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.